# அன்னை உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா



அன்னை உம்மு ஹபீபா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் புனித அடக்கஸ்தலம் - ஜன்னத்துல் பகீஃ, மதீனா

ரம்லா என்பது இவர்கள் ஆதிப் பெயர். உம்மு ஹபீபா என்பது சிறப்புப் பெயர். இவர்கள் அபூ ஸுஃப்யான் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் குமாரியாவார். நபித்துவத்துக்கு முன் 17ம் ஆண்டில் பிறந்தார்கள். உபைதுல்லாஹ் பின் ஜஹ்ஷ் என்பவர் இவர்களின் முதல் கணவர். இவ்விருவரும் இஸ்லாமை ஏற்று ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள். ஆனால் உபைதுல்லாஹ் அங்கிருக்குபோதே கிறிஸ்தவனாக மாறிவிட்டார். ஹஸ்ரத் உம்மு ஹபீபா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் இஸ்லாத்திலேயே இருந்துவிட்டார்கள். மதுவருந்தி மயக்கமேலிட்டால் உபைதுல்லாஹ் கீழே விழுந்து ஹபஷாவிலேயே இறந்தார்கள்.

பின்னர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களுக்கு இவர்களுடன் திருமணமாயிற்று. இத்திருமணம் நடந்தது ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டிலாகும். அப்பொழுது ஹஸ்ரத் உம்மு ஹபீபா (ரலியல்லாஹு அன்ஹா) வுக்கு வயது 36 இருக்கும். அபூ ஸுப்யான் முஸ்லிமானதன் பின்னும் இதர முஸ்லிம்கள் அவரைத் தலைத்தூக்கிப் பார்ப்பதையும் அவர் அண்மையில் அமர்ந்து பேசுவதையும் அதிருப்தியுடன் கருதி வந்தார்கள். இதனால் அபூஸுப்யான் மூன்று விஷயங்களை முடித்துக்கொள்ள வேண்டுமென கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களிடம் வேண்டினார்கள். அதில் ஹஸ்ரத் உம்மு ஹபீபா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களை திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்பதும் ஒன்று. இதை கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் ஏற்றுக்கொண்டு அங்ஙனம் செய்தார்கள். வேறு காரணங்களும் உள்ளன. இவர்கள் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் மீது மிகவும் பற்றுடையவர்கள். சுமார் 65 ஹதீஸ்கள் மட்டில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். களங்கமில்லாத வெள்ளையான மனம் படைத்தவர்கள். ஹிஜ்ரி 44 ஆம் ஆண்டில் காலமானார்கள்.




மேலும் பல இஸ்லாமிய பெரியார்களின் சரிதைகளை, எங்கள் இணையத்தளத்தில் வாசியுங்கள்:

www.mailofislam.com